அரசுத் தேர்வுகள் இயக்ககம் – சென்னை–6.

மேல்நிலைப் பொதுத்தேர்வு இரண்டாமாண்டு மே–2022

புதிய பாடத்திட்டம்

மொழிப்பாடம் – பகுதி–I தமிழ் – விடைக்குறிப்புகள்.

விடைத்தாள் மதிப்பிடும் போது கீழ்க்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும்.

1. நீலம் அல்லது கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்
2. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து தொடர் பிழை, சொற்பிழை, எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை இலக்கணப்பிழை இன்றி இருப்பின் முழு மதிப்பெண் வழங்குதல் வேண்டும்.
3. எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து அவ்வாறு குறைக்கும் மதிப்பெண்கள் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் மிகாமல் இருத்தல் வேண்டும்.
4. தவறான விடைகளை (X) குறியிட்டும் தொடர் பிழைகளை அடிக்கோடிட்டும் ஒற்றுப்பிழைகளைக் (^) குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.
5. மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் தனித்தனியே (✓) குறியிடுதல் வேண்டும்.
6. மிகையாக விடை இருப்பின் ''மிகை'' என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
7 ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் ''மீண்டும்'' என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
8 கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.
9. வினா எண் குறிப்பிடாத விடைகளுக்கு மதிப்பெண்கள் வழங்குதல் கூடாது.

மதிப்பெண்கள் : 90

| I | பலவுள் தெரிக.<br>அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. | மதிப் பெண் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|
| | பகுதி –I | | 14x1=14 |
| 1 | ஆ) பொருட்குறிப்பு | 1 | |
| 2 | அ) 9 | 1 | |
| 3 | இ) தமிழ் விடு தூது | 1 | |
| 4 | ஈ) சுரதா | 1 | |
| 5 | ஆ) பூமணி | 1 | |
| 6 | ஈ) சிவாஜி கணேசன் | 1 | |
| 7 | அ) வினைத்தொகை | 1 | |
| 8 | அ) சிற்பி பாலசுப்ரமணியம் | 1 | |
| 9 | அ) அறிவு | 1 | |
| 10 | ஆ) குகன் | 1 | |
| 11 | இ)ஆசிரியர் | 1 | |
| 12 | அ) சிலப்பதிகாரம் | 1 | |
| 13 | ஆ) வெ. இறையன்பு | 1 | |
| 14 | இ) தண்டியலங்காரம் | 1 | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | பகுதி –**II**<br>பிரிவு –**1**<br>**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக**<br>**(இரண்டு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | | **3x2=6** |
| | | | |
| 15 | • மழைக் காலத்தில் சூரியனின் திடீர்ப் பயணத்தால் வெண்ணிற ஒளி எங்கும் பரவி ஒளிரத் தொடங்கியது.<br>• நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாக மாறியது. | 1<br>1 | **2** |
| 16 | • ஆனந்தம்<br>• மனச்சோர்வு<br>• அற்பத்தனம்<br>• விழிப்புணர்வு<br>ஆகிய நான்கும் எதிர்பாராத விருந்தினர்களாக ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிட்டுள்ளார். | ½<br>½<br>½<br>½ | **2** |
| 17 | • ஒருவர் தன்னைத் தான் காத்துக் கொள்ள விரும்பினால் சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும்.<br>• சினத்தைக் காக்காவிட்டால், சினம் தன்னையே அழித்து விடும். | 1<br>1 | **2** |
| 18 | • இவ்வுலகம் பிளந்து வெடிக்கவில்லையே!<br>• வானம் இடிந்து விழவில்லையே!<br>• இன்னும் கடல் நீர் வற்றவில்லையே!<br>• இன்னும் இந்த உலகம் அழியாமல் தாமதிப்பது ஏனோ ? | ½<br>½<br>½<br>½ | **2** |
| | பிரிவு 2<br>எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: | | **2x2=4** |
| 19 | • உவமம்<br>• உருவகம்<br>• எச்சம்<br>• குறிப்பு<br>• உள்ளுறை , இறைச்சி<br>**(எவையேனும் நான்கு விடைகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2 | **2** |
| 20 | • குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணமே.<br>• நாணயத்தின் இருபக்கங்களைப் போலக் குடும்பமும் திருமணமும். | 2 | **2** |
| 21 | • மடக்கெழுத்தாணி<br>• வாரெழுத்தாணி<br>• குண்டெழுத்தாணி | 2 | **2** |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவு 3<br>**எவையேனும் ஏழனுக்கு விடை தருக** | | **7x2=14** |
| 22 | கான் – காடு<br>காண் – பார்<br><br>சான்று: கானகத்தில் உள்ள காட்சிகள் காண்பதற்கு இனிமையாகும்.<br>**(பொருத்தமான தொடர் எழுதியிருந்தால் மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br><br>1 | 2 |
| 23 | பனை ஓலையால் கூரை வேய்ந்திருந்தனர் . | 2 | 2 |
| 24 | பிள்ளைக்கு உடம்பு சரியில்லை. மூன்று நாட்களாக **சிரமப்படுகிறது .** | 2 | 2 |
| 25 | அ) பலகை – மரப்பலகை<br>பலகையால் ஆன மேசையில் உணவு உண்டனர்.<br>பலகை – பல கை<br>பல **கை**கள் ஒன்றிணைந்து வெற்றி பெற்றனர்.<br><br>ஆ) கோவில் – ஆலயம்<br>தஞ்சைக் கோவில் கட்டடக் கலைக்குச் சிறந்த சான்றாக அமைகிறது.<br><br>கோ வில் – அரசனின் வில் போர்ப் பாசறையில் வைக்கப்பட்டிருந்தது.<br>(பொருத்தமான தொடர்கள் அமைத்திருந்தால் முழு மதிப்பெண் வழங்கலாம்.) | ½<br>½<br><br>½<br>½ | 2 |
| 26 | **வானம்** பார்த்த பூமியில் **பயறு** வகைகள் பயிரிடப் படுகின்றன. | 2 | 2 |
| 27 | ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக<br>அ) அறுத்து – அறு + த் + த் + உ<br>அறு – பகுதி<br>த் – சந்தி<br>த் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி<br><br>ஆ) கண்டான் – காண் (கண்) + ட் + ஆன்<br>காண் – பகுதி (கண் எனக் குறுகியது விகாரம் )<br>ட் – இறந்த கால இடைநிலை<br>ஆன் – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி | 1<br>1<br><br>1<br>1 | 2<br><br>2 |

| | | | |
|---|---|---|---|
| 28 | **புணர்ச்சி விதி**<br>அ) முன்னுடை – முன் + உடை<br>• தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் (முன்ன்)<br>• உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே (ன் + உ = னு)<br>(அல்லது)<br>ஆ) பூம்பாவாய் – பூ + பாவாய்<br>• பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும் (ம்) | **1**<br>**1**<br><br><br>**1**<br>**1** | **2**<br><br><br><br>**2** |
| 29 | 1. சொல்லுருபைப் **பிரித்தும்** சேர்த்தும் எழு**துக.**<br>முன் — அவன் முன்வந்து கூறினான்<br>முன் — அவன் முன் வந்து கூறினான்<br>**(**இவை போன்ற தொடர் அமைத்தால் ம**தி**ப்பெண் வழங்கலாம்**.)** | **1**<br>**1** | **2** |
| 30 | அ) அலைபேசி வழி வங்கி முறை<br>ஆ) வாழ்க்கை வரலாறு | **1**<br>**1** | **2** |
| | பகுதி – **III**<br>பிரிவு **1**<br>எவையேனும் இரண்டனுக்கு விடை தருக | | **2x4=8** |
| 31 | இடம் **:**<br>நூல் – தண்டியலங்காரம்<br>ஆசிரியர் – தண்டி<br>பொருள் : தனக்கு நிகரில்லாத தமிழ்<br>விளக்கம் :<br>• மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது – சூரியன்.<br>• சான்றோரால் தொழப்பட்டு மலையில் பிறந்து மக்களின் அக இருளைப்போக்குவது – தமிழ் | 2<br><br>1<br>1 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 32 | இராமன் ஆற்றிய கடமை : | | 4 |
| | • கரிய அகில்கட்டைகளையும், சந்தனக் கட்டைகளையும், தேவையான அளவு தருப்பைப் புற்களையும் ஒழுங்குபட அடுக்கினான். | 1 | |
| | • பூக்களைக் கொண்டு வந்து, மணலினால் மேடையை அமைத்து, நன்னீரையும் எடுத்து வந்தான். | 1 | |
| | • தன் தந்தையாகிய சடாயுவைப் பெரிய கைகளில் இராமன் தூக்கிக் கொண்டு அடுக்கப்பட்ட விறகுகளின் மீது வைத்தான். | 1 | |
| | • இராமன், தந்தையின் நண்பனான கழுகு வேந்தனைத் தந்தையாகவே கருதி மகன் நிலையில் அவனுக்குரிய இறுதிச் சடங்குகளைச் செய்கிறான். | 1 | |

| | | | |
|---|---|---|---|
| 33 | வள்ளலார் கந்தகோட்டத்து இறைவனிடம் வேண்டுவதைத் **தெய்மணிமாலை பாடல் வழி விளக்குவன :**<br>• அறம் செய்வார் நிறைந்திருக்கும் சென்னையின் கந்தகோட்டத்துத் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கந்தவேளே!<br>• குளிர்ந்த முகத்தோற்றத்தையுடைய தூய மாணிக்க மணியே !<br>• அம்மணிகளுள் அருள் நிறைந்த சைவமணியே !<br>• எனக்கு ஒரு நெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்<br>• உள்ளத்தில் ஒன்றும், புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகர்தம் உறவு என்னைப் பற்றாதவாறு காக்க வேண்டும்.<br>• பெருமை சான்ற நினது புகழையே நான் பேச வேண்டும் .<br>• பொய் பேசாதிருக்க வேண்டும்<br>• சிறந்த வாழ்வியல் நெறியைப் பின்பற்றுமாறு எனக்கு அருள வேண்டும் .<br>• மதமான பேய் என்னை அணுகாதிருக்க வேண்டும்.<br>• துறவுக்கு எதிரான பெண்ணாசையை என் மனம் மறக்க வேண்டும்.'<br>• என்றும் உன்னை மறவாதிருக்க வேண்டும்.<br>• மதியும் நின் கருணையாகிய நிதியும் நோயற்ற வாழ்வும் உடையவனாக நான் இருக்க வேண்டும்.<br>• ஆறுமுகங்களை உடைய தெய்வமாகிய மணியே இத்தகைய சிறப்புகளை நீ எனக்கு அருள்வாயாக<br>**(எவையேனும் நான்கு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | | 4 |

| | | | |
|---|---|---|---|
| 34 | நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு :<br>• சிற்ப நூலாசிரியர்களால் நன்னிலத்தை ஆடல் அரங்கத்திற்காகத் தேர்ந்தெடுத்தார்கள்.<br>• மலைகளில் நீண்டு வளர்ந்த ஒரு சாண் அளவு கணுக்கள் கொண்ட மூங்கிலைக் கொண்டு வந்தனர்.<br>• தம் கைப்பெருவிரலால் 24 சாண்அளவினைக் கொண்டதாக மூங்கிலை வெட்டினர். அதுவே அரங்கம் அமைக்கும் அளவுகோலாகும்.<br>• ஏழுகோல் அகலம், எண்கோல் நீளம், ஒருகோல் உயரம் உடையதாக நாட்டிய அரங்கம் அமைத்தனர்.<br>• தூணின் நிழல் அரங்கில் விழாதபடி நிலை விளக்குகள் நிறுத்தினர்.<br>• ஒருமுக எழினி பொருமுக எழினி, கரந்து வரல் எழினி என மூன்று வகை எழினிகளை அமைத்தனர்.<br>• ஓவிய வேலைப்பாட்டுடன் மேல் விதானம் அமைத்தனர்<br>• சிறந்த முத்துக்களால் இயன்ற மாலைகளை அரங்கம் முழுவதும் தொங்கவிட்டனர். | | 4 |
| பிரிவு 2<br>எவையேனும் இரண்டனுக்கு விடை தருக | | | 2x4=8 |
| 35 | ஒலிக்கோலங்கள் :<br>• எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் தான் தொடங்குகிறது.<br>• மொழிசார்ந்த கவிதையும் இசையோடும் இசைக் கருவியோடும் தான் பிறக்கிறது. ஓசையும், பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்கின்றன. இதனையே ஒலிப்பின்னல் என்கிறோம்<br>• "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்<br>கடாஅ யானைக் கலிமான் பேக'' – புறம் (145)<br>இப்படிப் பல உயிர் ஒலிகள் – குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்ப வரல் தன்மை பெற்றிருப்பதும் இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் இங்கே கவனத்திற்குரியன இந்த ஒலிக்கோலம் சங்கப்பாடல்களில் முக்கியமான ஒரு பண்பு ஆகும். | | 4 |

| | | | |
|---|---|---|---|
| 36 | **இன்றைய கூட்டுக்குடும்பம் பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே :**<br><br>• சங்க காலத்தில் தனிக்குடும்ப அமைப்பு விரிவு பெற்றது. இவர்களுடன் பெற்றோர் ஒருவரின் தந்தை உடன்வாழும் விரிந்த குடும்ப முறை.<br>• ஒக்கூர் மாசாத்தியாரின் புறநானூற்றுப் பாடல் (பாடல் 279) கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தையும் சேர்ந்து வாழ்ந்த நேர் வழி விரிந்த குடும்பமுறையைப் பாடுகிறது.<br>• மக்களுடன் நிறைந்து, அறத்தினை விரும்பிய சுற்றத்தோடு சேர்ந்து தலைவனும் தலைவியும் மனையறம் காத்தலே இல்வாழ்வின் பயன் – என்னும் விரிந்த குடும்பச் செய்தியைத் தொல்காப்பியம் பதிவு செய்கிறது.<br>• அதன் தொடர்ச்சியாகவே இன்றைய சமூக அமைப்பும் கூட்டுக் குடும்பம் தனிக்குடும்பம் என்ற அலகுகளைக் கொண்டதாக இருக்கிறது.<br>• “மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே” என்னும் குறுந்தொகைப் பாடல் மூலம் பெண் தன் கணவனையே முழுவதும் சார்ந்து இருக்கிறாள். | | 4 |
| 37 | **பண்டைய காலப் பள்ளிக்கூடங்களில் பின்பற்றப்பட்ட குறிப்பிடத்தக்க** நடைமுறைகள் :<br>• வித்யாரம்பம் – பள்ளியில் மாணவனைச் சேர்த்தல்.<br>• மையாடல் – சுவடியில் உள்ள எழுத்துகள் செவ்வனே தெரிவதற்காகச் சுவடியில் வசம்பு, மஞ்சள், மணத்தக்காளிச் சாறு, மாவிலைக்கரி, கூட்டிச்செய்த மையை அதில் தடவுவார்கள்.<br>• கையெழுத்து எழுத்தின் வடிவம் – எழுத்துக்கள் ஒன்றோடு ஒன்று படாமலும் வரி கோணாமலும் எழுதுதல்.<br>• மனனப்பயிற்சி – தமிழில் நிகண்டு, நன்னூல் , காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள், முதலான பாடங்களை மனப்பாடம் செய்தனர். ஆத்திச்சூடி , கொன்றை வேந்தன், என்பவை அகராதி வரிசையில் அமைந்தவை ஆகும். | 1<br>1<br>1<br>1 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 38 | உழவுத் தொழிலில் மேலாண்மை :<br>• சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல்.<br>• உரிய நேரத்தில் விதைத்தல்.<br>• நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல்.<br>• அறுவடைக்குப் பின் பாதுகாத்தல்.<br>• உரிய விலை வரும் வரை பாதுகாத்தல்.<br>''வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்<br>செய் எனக் காத்து இனிதுஅரசு செய்கின்றான்''<br>– பாலகாண்டம் (179)<br>• வறியவன் ஒருவன் சிறு வயலைப் பாதுகாப்பது போலத் தசரதன் இவ்வுலகம் முழுவதையும் பாதுகாத்தான் என கம்பர் குறிப்பிடுகிறார்.<br>• மனமே ஒரு வேளாண்மைக்குட்பட்ட மேலாண்மை என்பதை வாழ்வியல் அறங்களை விளை நிலத்திற்கு ஒப்பாக அறநெறிச்சாரம் என்ற நூல் குறிப்பிடுகிறது.<br>(எவையேனும் நான்கு கருத்துகள் இருந்தால் முழு மதிப்பெண் தரலாம்) | | 4 |
| | பிரிவு 3<br>எவையேனும் மூன்றனுக்கு விடை தருக | | 3x4=12 |
| 39 | அ) உவமையணி<br>அணியிலக்கணம் :<br>• உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் உவம உருபு வெளிப்படையாகவும் வந்தால் உவமை அணியாகும்.<br>சான்று :<br>உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்<br>பாம்போடு உடன்உறைந் தற்று.<br>சான்று விளக்கம் :<br>• அகத்தில் உடன்பாடு இல்லாதவருடன் கூடி வாழும் வாழ்க்கை , ஒரு குடிசையில் பாம்புடன் வாழ்வது போன்றதாகும்.<br>அணி பொருத்தம் :<br>உவமை – குடங்கருள் பாம்போடு<br>உவமேயம் – உடம்பாடு இலாதவர் வாழ்க்கை<br>உருபு – அற்று ( வெளிப்படை )<br>( பொருத்தமான சான்று, விளக்கம், பொருத்தம் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம் ) | 2<br><br><br><br>1<br><br><br><br>1 | 4 |

| | | | |
|---|---|---|---|
| | (அல்லது)<br>ஆ) அணி<br>அணி சுட்டல் :<br>**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**<br>பண்பும் பயனும் அது.<br>–இக்குறட்பாவில் நிரல் நிறை அணி பயின்று வந்துள்ளது.<br>**அணி இலக்கணம் :**<br>சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே பொருள் கொள்வது நிரல் நிறை அணி எனப்படும்.<br>சான்று விளக்கம் :<br>அன்பும், அறனும் உடையதாக இல்வாழ்க்கை விளங்குமாயின் அதுவே வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும்<br>**அணிப்பொருத்தம் :**<br>இக்குறட்பாவில் அன்பு , அறன் என்பவற்றை வரிசையாக நிறுத்தி அவற்றோடு தொடர்புடைய பண்பு , பயன் என்பவற்றை முறையே அடுத்த வரிசையில் இணைத்துப்பொருள் கொள்ளுமாறு அமைக்கப் பெற்றுள்ளது<br>இதுவே நிரல் நிறை அணியாகும்.<br>அன்பு – பண்பு<br>அறன் – பயன்<br>என்று நிரல்பட உள்ளது. | 1<br><br>2<br><br>1 | 4 |
| 40 | மையக் கருத்து<br>மோனை , எதுகை, இயைபு , முரண் , அணி , சந்தம் சுவை<br>( மையக்கருத்தை எழுதி ஏற்புடைய 3 நயங்கள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம் ) | 1<br>3 | 4 |
| 41 | வாழ்க்கை நிகழ்வில் பழமொழி :<br>• பழமொழி விளக்கம்<br>• வாழ்க்கை நிகழ்வில் பழமொழி (கதை )<br>• அறியும் கருத்து (நீதி)<br>(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம் ) | 2<br>1<br>1 | 4 |

| | | | | |
|---|---|---|---|---|
| 42 | | அ) பாடாண் **திணை:**<br>**திணை விளக்கம் :** ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண்திணை.<br>எ.கா. ‘‘ காய்நெல் லறுத்துக் கவளம் கொளினே’’<br>– புறம் ( பிசிராந்தையார்).<br>திணை பொருத்தம் : அரசன் அறிவில் குறைந்தவனாகி முறையற்ற சுற்றத்தோடு வரியைத் திரட்ட விரும்புவது, யானை தான் புகுந்த நிலத்தில் தானும் உண்ணாமல் பிறருக்கும் பயன்படாமல் நெல்லை வீணாக்குவது போன்றது. முறையற்ற வரிதிரட்டலால் அரசன் தானும் பயனடைய மாட் ான். மக்களும் பயனடையார். என்பதைப் பிசிராந்தையார் பாடியதால் பாண்டியன் அறிவுடை நம்பி எனும் அரசன் சீர்மை பெற்றுச் சிறப்புற்றான். | 2<br>1<br>1 | 4 |
| | | (அல்லது)<br>ஆ) **செவியறிவுறூஉத் துறை :**<br>துறை **விளக்கம்:** அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறை தவறாமல் செய்யுமாறு அவன் கேட்க அறிவுறுத்துதல் என்பதே செவியறிவுறூஉத் துறை.<br>எ.கா. ‘‘காய் நெல்லறுத்துக் கவளம் கொளினே’’<br>– புறம் ( பிசிராந்தையார்).<br>துறை **பொருத்தம்** : ‘‘அரசன் அறிவில் குறைந்தவனாகி முறையற்ற சுற்றத்தோடு வரியைத் திரட்ட விரும்புவது, யானை தான் புகுந்த நிலத்தில் தானும் உண்ணாமல் பிறருக்கும் பயன்படாமல் நெல்லை வீணாக்குவது போன்றது’’ என்று பாண்டியன் அறிவுடை நம்பியின் தவறான வரிவிதிப்பைச் சுட்டிக்காட்டி, பிசிராந்தையார் அறிவுறுத்திக் கூறியதால் இது செவியறிவுறூஉத் துறை ஆனது | 2<br>1<br>1 | 4 |
| 43 | | தமிழாக்கம் : | | |
| | 1. | கற்றல் எல்லா இடங்களிலும் உரிமையாளரைப் பின்பற்றும் ஒரு பொக்கிஷமாகும். / கற்றல் என்பது ஒரு புதையல் போலக் கற்பவரை அது தொடந்து செல்லும். / கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. | 1 | 4 |
| | 2 | ஒரு புதிய மொழி என்பது, ஒரு புதிய வாழ்க்கையைப் போன்றது. | 1 | |
| | 3. | மொழிகளின் அறிவு ஞானத்திற்கான முக்கிய வழித்தடம் /படிக்கட்டுகள். | 1 | |
| | 4. | என் மொழியின் எல்லைகள்தான் என் உலகின் எல்லைகளாகும்.<br>(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 1 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 43 | | காது கேளாதவர்களுக்கான மாற்று வினா. | | |
| | 1. | மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரிய கலை. | 1 | |
| | 2 | பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். | 1 | 4 |
| | 3. | மொழி வளர்ச்சி குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது. | 1 | |
| | 4. | மொழி / தாய்மொழி | 1 | |

| | | | |
|---|---|---|---|
| **பகுதி IV**<br>அனைத்து **வினாக்**களுக்கும் விடையளிக்கவும்:<br>(ஆறு **கருத்துக்கள் இருப்பின்** முழு மதிப்பெண் வழங்கவும்) **3x6=18** | | | |
| 44 | **அ) தமிழின் சீரிளமை திறம் வியந்து கவிஞர் சிற்பி** பாலசுப்பிரமணியம் கூறுவன :<br>• செங்கதிரவன் மலை உச்சியில் மாலை நேரத்தில் தலைசாய்க்கும் போது வானமெல்லாம் செந்நிறமான பூக்காடாக மாறுவது போல உழைக்கும் தொழிலாளர்களின் கைகள் சிவந்து துன்பப்படும்.<br>• உழைக்கும் தொழிலாளர்களின் வியர்வைத் துளிகள் உயர்ந்து தோள் மீது முத்து முத்தாய் வீற்றிருக்கும்.<br>• இலக்கியப் பசிக்கு உணவாக எங்களின் முத்தமிழே நீயிருக்கிறாய்.<br>• பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்.<br>• பாரி முதலான கடையேழு வள்ளல்களை உலகிற்கு ஈன்று தந்தாய்.<br>• மீண்டும் பழமை நலம் படைப்பதற்குத் தமிழ்க்குயிலே கூவி வந்திடுக.<br>• கூண்டை உடைத்து வெளிவரும் சிங்கம் போலத் தடைகளைத் தாண்டி வந்த குளிர் பொதிகையில் தோன்றிய தென்தமிழே என்று சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுகிறார் | | 6 |
| | (அல்லது)<br>ஆ) அறிவுடைமை : | | |
| | • திருக்குறள் – குறிப்புகள் | 1 | |
| | • அறிவு அழிவு நேராமல் காக்கக் கூடிய கருவியாகும். பகைவராலும் அழிக்க முடியாத பாதுகாப்பு அரண் ஆகும். | 1 | |
| | • மனத்தை அது போகும் வழியில் செல்லவிடாமல் தீமையிலிருந்து விலக்கி நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும். | 1 | 6 |
| | • உலகம் எத்தகைய உயர்ந்த நெறியில் செல்கிறதோ, | 1 | |

| | | | |
|---|---|---|---|
| | அந்நெறியில் தானும் உலகத்தோடு இணைந்து செல்வதே அறிவாகும்.<br>• எப்பொருளை யார் சொல்லக் கேட்டாலும், அப்பொருளின் உண்மையான பொருளைக் காண்பதே அறிவாகும்.<br>• பின்பு வரப்போவதை முன்பே அறிந்து காத்துக் கொள்ளும் வல்லமை கொண்ட அறிவுடையவர்க்கு அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை. | 1<br><br>1 | |
| 45 | அ) பண்டை காலக்கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகள் :–<br><br>வித்யாரம்பம் அல்லது கல்வி தொடக்கம் :–<br>முதன்முதலில் ஐந்தாம் வயதில் வித்யாப்பியாசம் செய்யும்பொழுது தாய் தந்தையர் பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாகக் கொடுத்தனர்.<br>**முறைவைப்பு :–**<br>உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல அதை மாணாக்கர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை 'முறை வைப்பு' என்று கூறுவார்கள்.<br>**மையாடல் விழா :–**<br>சுவடிகளில் உள்ள எழுத்துகள் செவ்வனே தெரிவதற்காக சுவடியில் வசம்பு, மஞ்சள், மணத்தக்காளியிலைச்சாறு அல்லது ஊமத்த இலைச்சாறு, மாவிலைக்கரி, தர்ப்பைக்கரி முதலியவற்றை தடவுவார்கள்<br><br>இங்ஙனம் மைதடவிப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்குவதனால் 'மையாடல் விழா' என்று கூறுவர்.<br><br>**எழுத்துப் பயிற்சி :–**<br>• பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள்<br>• உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத அதன்மேல் பிள்ளைகள் எழுதுவார்கள்<br>• எழுத்துகள் ஒன்றோடொன்று படாமல் வரி கோணாமல் பழைய காலத்தில் எழுதி வந்தனர்.<br><br>**எழுத்தாணிகள் :–**<br>• வாரெழுத்தாணி<br>• மடக்கெழுத்தாணி<br>• குண்டெழுத்தாணி<br><br>மனனப் பயிற்சி :–<br>• தமிழில் நிகண்டு நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதிநூல்கள்<br>• கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று | | **6** |

| | | | |
|---|---|---|---|
| | வாதம் புரிதல் :–<br>• மிகச்சிறந்த நூல் பயிற்சியுடையவர்கள் அரசவைகளில் வாதம் புரிந்து தம் கல்வித் திறமையை வெளிப்படுத்தினர் என மதுரைக்காஞ்சி எடுத்துக் கூறுகிறது.<br>• பள்ளிக்கூடங்களில் நூல் பயிலும் இயல்பை நன்னூல் விளக்குகிறது<br>**சாந்துணையும் கற்றல் :–**<br>பல நூல்களையும் பள்ளிக்கூடத்தில் பயின்றதோடு நில்லாமல் வாழ்நாள் முழுவதும் நம்நாட்டவர் பயின்று வந்தனர்.<br>“என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு” எனத் திருக்குறள் கூறுகிறது.<br>ஓதற்பிரிவு :– இல்லறம் நடத்தும் காலத்தில் கூட, வேற்று நாட்டுக்குச் சென்று அங்கு உள்ளோர்க்குத் தம்முடைய கல்வியைக் கற்பித்தும், வாதம் புரிந்து வென்றும், தாம் முன்பு அறியாதவற்றைக் கற்றும் வந்தனர்.<br>தொல்காப்பியம் ஓதற்பிரிவிற்கான கால எல்லை மூன்று ஆண்டுகள் எனக் கூறுகிறது.<br>**(ஆறு தலைப்புகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | | |
| | (அல்லது)<br>ஆ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது.<br>குடும்பம் :–<br>• குடும்பம் எனும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணமே.<br>• ‘திருமணம்’, ‘குடும்பம்’ ஆகிய இரண்டு சொற்களும் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் இடம் பெறவில்லை.<br>• குடும்பம் எனும் சொல் முதன்முதலில் திருக்குறளில் தான் வருகிறது<br>வாழிடம் –<br>• சங்க இலக்கியத்தில் இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில் கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம் முதலிய சொற்கள் குடும்பங்களின் வாழ்விடங்களில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டுகின்றன.<br>• ‘மனை’ எனும் சொல் தம்மனை நும்மனை என சங்க இலக்கியங்களில் உள்ளதை அறியலாம்.<br>**மணந்தகம் :–**<br>• கணவனும், மனைவியும் இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்க கட்டமே ‘மணந்தகம்’ எனப்படுகிறது. | | **6** |

| | | | |
|---|---|---|---|
| | தாய்வழிக் குடும்பம் :–<br>• சங்க காலத்தில் தாயே குடும்பத்திற்கு தலைமை ஏற்றிருந்தாள்.<br>• தாய்வழி சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.<br>தந்தை வழிக் குடும்பம் :–<br>• ஆண் சமூக முறை வலுவாக வேரூன்றியிருந்தது.<br>• "மனையுறை மகளிர்க்கு ஆடவரே உயிர்"– குறுந்தொகை.<br>தனிக்குடும்பம் :–<br>• தாய், தந்தை, குழந்தை மூவருள்ள தனிக்குடும்பம் மிகவும் நெருக்கமானது என்பதால் இது தொடக்கநிலை, எளிய மற்றும் நெருக்கமான குடும்பம் எனப்படும்.<br>தனிக்குடும்ப முறை, சமூகப்படி நிலையில் இறுதியாக ஏற்பட்ட ஒன்றாகும். | | |
| 46 | **அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட** மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க<br>இருபதாம் நூற்றாண்டின் மறுமலர்ச்சிக் கவிஞர் மகாகவி பாரதியார்<br>மொழிப்பற்று :<br>• மகாகவி பாரதி, பன்மொழிப் புலமை பெற்றவர். புலமை பெற்ற மொழிகளிளெல்லாம் உயர்ந்த மொழியாகத் தமிழ் மொழியைக் காட்டுகிறார்.<br>"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்<br>இனிதாவ தெங்கும் காணோம்"<br>– என மொழிப்பற்றை வெளிப்படுத்துகிறார்.<br>• "தமிழ், தமிழ், தமிழ் என்று எப்போதும் தமிழை வளர்ப்பதையே கடைமையாக கொள்<br>• புதிய புதிய சிந்தனைகள், புதிய புதிய உண்மைகள், புதிய புதிய இன்பங்கள் தமிழில் வளர்ந்து கொண்டே இருக்க வேண்டும் தமிழ், தமிழ் செழுமை அடைய வேண்டும்<br>சமூகப்பற்று :<br>• பெண்ணுக்குச் சமவுரிமை வேண்டும்<br>• ஆணும் பெண்ணும் ஒருயிர் இரண்டு தலைகள்<br>• பெண்ணை அடிமை செய்வோன், தன் கண்ணைக் குத்திக் கொண்டவனாவான்<br>• பெண்ணை அடைத்து வைப்பவன் கண்ணை அடைத்தவனாவான்<br>• தமிழ் நாட்டில் நோய்கள் தீர்க! வீதிகள் தோறும் தமிழ்ப் பள்ளிகள் பெருகுக ! | | 6 |

| | | | |
|---|---|---|---|
| | • நவீன கலைகள் எல்லாம் பயிற்சி பெற்று வணிகமும் இயந்திரங்களும் பெருகவேண்டும்.<br>• இசை, சிற்பம், இயந்திரநூல், வானநூல், இயற்கை நூலென ஆயிரம் ஆயிரமாய்ப் பெருக வேண்டும்.<br><br>(அல்லது)<br><br>ஆ) உங்கள் பகுதியில்வாழ்ந்து வரும் கலைஞர் ஒருவரை நேரில் கண்ட அனுபவம்.<br>• கலைஞரின் வாழ்வியல் குறிப்புகள்<br>• குறிப்பிட்ட துறையில் வளர்ந்த விதம்<br>• வெற்றிகள், சாதனைகள், விருதுகள்<br>• கலைஞரின் வாழ்வுதரும் பாடம்<br>மாணவர்கள் பிழையின்றி சொந்த நடையில் எழுதி விடை ஏற்புடடையதாக இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம். | 1<br>2<br>2<br>1 | 6 |
| | பகுதி V<br>அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக | | 4+2=6 |
| 47 | அ) இதில் வெற்றி பெற<br>விண்வேறு ; விண்வெளியில் இயங்கு கின்ற<br>வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு ;<br>மண்வேறு ; மண்ணோடு கலந்தி ருக்கும்<br>மணல்வேறு பனித்துளியும் மழையும் வேறு ;<br>புண்வேறு ; வீரர்களின் விழுப்புண் வேறு ;<br>புகழ்வேறு ; செல்வாக்கு வேறு ; காணும்<br>கண்வேறு ; கல்விக்கண் வேறு ; கற்றார்<br>கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.<br>–சுரதா. | 4 | 4 |
| | ஆ) அரிது என முடியும் குறள்<br>செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்<br>வானகமும் ஆற்ற லரிது | 2 | 2 |